**செப்டம்பர் 8**

## புனித கன்னிமரியின் பிறப்பு

ஏறக்குறைய இருபது நூற்றாண்டுகளுக்கு முன் கலிலேயா நாட்டில் உள்ள நாசரேத் என்னும் சிற்றூரில் சுவக்கீன் அன்னாள் என்ற தூய தம்பதிகள் வசித்தனர். இவர்கள் தாவீது அரசரின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு முதிர் பிராயமாகி விட்டது. குழந்தைகள் கிடையாது. இனி குழந்தை பிறக்காது என்று நினைத்தார்கள். இறைவன் எல்லாம் வல்லவர். இவர்களுக்கு பெண் குழந்தையை கொடுத்தார். பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவளான அவள், தன் பெற்றோரான சுவக்கீனுக்கும் அன்னம்மாளுக்கும் மகிமையானாள். குழந்தைக்கு மரியாள் என்று பெயரிட்டார்கள். உலகத்தை மீட்டு இரட்சிக்கும்படி குழந்தையாகப் பிறக்க இருந்த இயேசுவின் தாய் இவளே.

பிள்ளைகள் தம் அன்னையின் பிறந்த நாளைக் கொண்டாடுகின்றனர். இதற்காகப் பரித்தியாகங்கள் செய்து பணம் சேர்த்து அன்னைக்கு ஏதாவது வாங்கிக் கொடுக்கிறார்கள். அன்னையும் தன் பிள்ளைகளுக்கு ஏதாவது வாங்கி கொடுக்கிறாள். மரியன்னைக்கு நாம் செய்யும் சிறந்த அன்பளிப்பு: இவளது புண்ணியங்களான தாழ்ச்சி, அன்பு, பொறுமை, கற்பு, கீழ்ப்படிதல் முதலிய புண்ணியதலங்களை அன்னையும் தம் பிள்ளைகளாகிய நமக்கு வேண்டிய வரங்களைத் தாராள மனத்துடன் கொடுப்பாள். நாம் அவளுடைய பிரியமுள்ள பிள்ளைகளாக நடந்து கொண்டால், அவள் தாயென தன்னைக் காட்டுவாள். அவளுடைய அமல உற்பவத்தைக் குறித்து அல்லது கடவுள் அவளுக்குக் கொடுத்துள்ள வல்லமை, ஞானம், இரக்கம் இவற்றிற்கு நன்றியாக காலையிலும், மாலையிலும் மங்கள வார்த்தை மன்றாட்டை மும்முறை சொல்லி, பாவத்தை விலக்கவும் அவளது புண்ணியங்களை அனுசரிக்கவும் அவளது உதவியை நாடுவோம்.

தூயோர்களாம் எல்லோரும் - நீ
தோன்றும் நாளினை
ஓயாமல் நோக்கிப் பார்த்தே – தம்
முள் மகிழ்ந்தாரே

**சிந்தனை:**

“மரியாயின் வாழ்வும், கன்னிமையும் கண்ணாடியில் இருப்பது போல் உன் கண்முன் இருக்கட்டும். அழகின் முழுமையான அவளை எப்பொழுதும் உன் கண்முன் வைத்திரு” (புனித அம்புரோஸ்)

**செபம்:** பாவமில்லாமல் இவ்வுலகிற்கு வந்த மரியாயே, மானிடரனைவரும் பாவமில்லாமல் இவ்வுலகை விட்டுப் பிரியும் வரம் பெற்றுத் தாரும்.